# தமிழ்மொழி ஆண்டு 4

பெயர் : ____________ திகதி : _______

பாடம் 2

## விழிப்புணர்வு கொள்வோம்

வாசித்து அறிக.

### மேடை நாடகம்

**தெராத்தாய் வசிப்பிட மக்களுக்கு ஒரு நற்செய்தி!**

இவ்வட்டார இளைஞர் சங்கம் மேடை நாடகம் ஒன்றனை ஏற்பாடு செய்துள்ளது. 'போதைப்பொருள் அற்ற நாடு' எனும் கருப்பொருள் கொண்ட இந்நாடகம் எதிர்வரும் சனிக்கிழமை இரவு நடைபெறும்.

பள்ளி மாணவர்களும் பெற்றோர்களும் திரளாக வந்து மேடை நாடகத்தைக் கண்டு களிக்கவும். போதைப்பொருளுக்கு எளிதில் அடிமையாகும் பள்ளி மாணவர்கள் பற்றியும் அதனால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றியும் இந்நாடகம் சித்தரிக்கும்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களால் விளையும் கொலை, கொள்ளை, கும்பல் சண்டை போன்ற சட்ட விரோதச் செயல்கள் பற்றி நமக்குத் தெரிய வரும்.

சிறுவயது முதலே போதைப்பொருளைப் பற்றிய விழிப்புணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

வாருங்கள்! வாருங்கள்!
அனைவரும் ஒன்றிணைவோம்!
விழிப்புணர்வு பெறுவோம்!
போதைப்பொருளை வேரோடு சாய்ப்போம்!

மேல் விவரங்கள் பெறுவதற்கு,
திரு. த. கோச்செழியன்
திறன்பேசி: 012-1234567



## நடவடிக்கை 2

வினாக்களுக்கு விடையளி.

1. மேடை நாடகத்தின் ஏற்பாட்டாளர் யார்?

2. இந்நாடகத்தின் கருப்பொருள் யாது?

3. இம்மேடை நாடகம் எவ்வாறு பொதுமக்களுக்குப் பயனளிக்கும்?

4. அறிவிப்பில் கூறப்பட்ட சட்ட விரோதச் செயல்கள் யாவை?

5. பொதுமக்கள் போதைப்பொருள் ஒழிப்பிற்கு எவ்வாறு துணைபுரியலாம்?

LIVEWORKSHEETS